

தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் வட்டம் சத்தியமங்கலம் ஊராட்சியில் புதிய நியாய விலைக் கடையினை உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் நேற்று முன்தினம் (31.05.2025) திறந்து வைத்தார். பாபநாசம் சட்டமன்ற உறுப்பினர் முனைவர்.எம்.ஹெச்.ஜவாஹிருல்லா, மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், கும்பகோணம் சார் ஆட்சியர் திருமதி. ஹிருத்யா எஸ்.விஜயன் மற்றும் பலர் உடன் உள்ளனர்.



தென்மேற்கு பருவமழை தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, முன்னிலையில் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று முன்தினம் (31.05.2025) நடைபெற்றது. உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) நே.பொன்மணி, மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், மாநகராட்சி ஆணையாளர் டாக்டர்.இளங்கோவன் ஆகியோர் உள்ளனர்.




தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் வட்டம் உமையாள்புரம் அரசு உதவி பெரும் உயர் நிலைப் பள்ளி வளாகத்தில் ஊரகப் பகுதிகளில் மக்களுடன் முதல்வர் திட்டத்தினை உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர். கோவி. செழியன் நேற்று முன்தினம் (31.05.2025) துவக்கி வைத்து நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார். மாவட்ட ஆட்சித் தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், மாநிலங்களவை உறுப்பினர் மு.சண்முகம், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி.ஆர்.சுதா, பாபநாசம் சட்டமன்ற உறுப்பினர் முனைவர்.எம்.ஹெச். ஜவாஹிருல்லா, மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன். கும்பகோணம் சார் ஆட்சியர் ஹிருத்யா எஸ். விஜயன் மற்றும் பலர் உடன் உள்ளனர்.

### தஞ்சாவூர் மாவட்டம் – பாபநாசம் வட்டத்தில் ‘மக்களுடன் முதல்வர்’ திட்ட முகாம்!

# 325 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 63 லட்சத்தில் மதிப்பில் மானியத்துடன் கூடிய கடனுதவி!

தஞ்சாவூர், ஜூன் 2-

தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் வட்டத்தில் மக்களுடன் முதல்வர் திட்டம் முகாம்களை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் துவக்கி வைத்து 25 மகளிர் சுயஉதவி குழுக்களில் உள்ள 325 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 63 இலட்சம் மதிப்பிலான மானியத்துடன் கூடிய கடனுதவிகளை வழங்கினார்.

தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் வட்டத்திற்குட்பட்ட 5 இடங்களில் மக்களுடன் முதல்வர் முகாம் நிகழ்ச்சிகள் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தலைமையில் நேற்று முன்தினம் (31.05.2025) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், தலைமை வகித்தார்.

மாநிலங்களவை உறுப்பினர் மு.சண்முகம், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி.ஆர். சுதா. பாபநாசம் சட்டமன்ற உறுப்பினர் முனைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா, மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், கும்பகோணம் சார் ஆட்சியர் திருமதி. ஹிருத்யா எஸ்.விஜயன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும், தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் வட்டம் உமையாள்புரம் ஊராட்சிக்குட்பட்ட அரசு உதவி பெறும் உயர் நிலைப்பள்ளி, சத்தியமங்கலம் ஊராட்சிக்குட்பட்ட நக்கம்பாடி சமுதாயக்கூடம், பண்டாரவடை ஊராட்சிக்குட்பட்ட ஜைனுால் உலூாம் கல்யாண மண்டபம், வழுத்துார் ஊராட்சிக்குட்பட்ட சௌகத்துல் இஸ்லாம் அரசு உதவி பெறும் ஆரம்ப பள்ளி, பசுபதி கோவில் ஊராட்சிக்குட்பட்ட மகளிர் சுய உதவிக் குழு பயிற்சி கட்டிடம் ஆகிய 5 இடங்களில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 25 மகளிர் சுயஉதவி குழுக்களில் உள்ள 325 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 63 இலட்சம் மதிப்பிலான மானியத்துடன் கூடிய கடனுதவிகளை வழங்கி உயர் கல்வித் துறை அமைச்சர் பேசியதாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் மூன்றாம் கட்டமாக பாபநாசம் வட்டத்தில் 5 இடங்களில் நடைபெறுகிறது. முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ஏழை எளியோர் நலன் காக்க ஏராளமான நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், புதுமை பெண் திட்டம். இன்னுயிர் காப்போம், தமிழ்ப் புதல்வன் திட்டம், விடியல் பயணம், காலை உணவுத் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் போன்ற திட்டங்கள் இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், கல்வி வளர்ச்சியில் தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. தாழ்த்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர். பிற்படுத்தப்பட்டோர் கல்வி உரிமை பெறுவதற்கு சட்டப் பாதுகாப்பையும் சமூக நீதியினையும் டாக்டர் அம்பேத்கர், தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் பெற்றுத் தந்தார்கள். சமூக நீதியினையும் கல்வி உரிமையினையும் தொடர்ந்து அக்கறையுடன் முதலமைச்சர் காப்பாற்றி வருகிறார். பல்வேறு திட்டங்களின் மூலம் அனைத்துத் துறை அரசு அலுவலர்களும் மக்களை தேடி மக்களது குறைகளை களைய நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். பொதுமக்கள் இத்திட்டங்களை பயன்படுத்தி பயன்பெற வேண்டும் என உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தெரிவித்தார்.

மேலும், உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் மக்களுடன் முதல்வர் முகாமில் பதிவு செய்து உடனடி தீர்வாக தொழிலாளர் நலத்துறை சார்பில் தொழிலாளர் நலவாரிய உறுப்பினர் அட்டைகள், முதலமைச்சரின் மருத்துவ காப்பீடு அட்டைகள், புதிய குடும்ப அட்டைகள் போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சிகளில் சமூக பாதுகாப்புத் திட்டம் தனித்துணை ஆட்சியர் பெ.மணிமாறன், பாபநாசம் வட்டாட்சியர் தா.பழனிவேலு, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் க.விஜயலட்சுமி, ந.சிவகுமார் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கிருஷ்ணகிரியில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள்

# மாவட்டம் முழுவதும் சிறப்பாக கொண்டாடப்படும்!

### கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!



கிருஷ்ணகிரி, ஜூன் 2-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களது பிறந்தநாள் விழா ஜூன் 3 ம் தேதி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட வேண்டும்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக சார்பாக கிருஷ்ணகிரியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, 1500 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும்.

மாவட்ட செயலாளர்கள் மதியழகன் எம்எல்ஏ அறிக்கை.

தங்கச் சூரியன் உதிக்கும் வங்க கடலோரத்தில் துயில் கொண்டிருக்கும் எங்கள் அன்பு கலைஞரே,

“என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே” எனும் காந்தக் குரலுக்கு சொந்தமான எங்கள் முத்தமிழ் அறிஞரே,

பெரியாரின் எண்ணங்களை அண்ணாவின் வழியில் நடைமுறை படுத்தி பல லட்சியங்களை சாதித்த பேரறிஞரின் தம்பியே, சட்டங்கள் பல இயற்றி, திட்டங்கள் பல தீட்டி தமிழ்நாட்டை உலகறிய செய்த எங்கள் அன்பு இதயமே,

அய்யன் திருவள்ளுவருக்கு தேர் வைத்தால் போதாது என்று வானுயர சிலை வைத்து உலகத்தையே அண்ணார்ந்து பார்க்க வைத்த திருக்குறளுக்கு உரை எழுதிய தங்க பேனாவே,

உங்கள் பிறந்த நாளில் வணங்குகின்றோம்.

இந்திய நாட்டிலேயே சிறந்த முதலமைச்சராக நான்காண்டுகள் சிறப்பான சாதனைகளை புரிந்து ஐந்தாவது ஆண்டில் வெற்றி நடை போட்டு கொண்டிருக்கும் தமிழக முதல்வர் தளபதியார் அவர்கள் மற்றும் தமிழக துணை முதல்வர் மாண்புமிகு இளம் தலைவர் ஆகியோரின் கரங்களை வலுப்படுத்துவோம்.

கழக அரசின் சாதனை திட்டங்களை தமிழக மக்களிடத்தில் சென்றடையும் வகையில் பிரச்சாரம் செய்து “வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு” தமிழக முதல்வர் திராவிட மாடல் நாயகர் மாண்புமிகு தளபதியார் அவர்களின் சபதத்தை நிறைவேற்றும் வகையில் கழக தோழர்கள் இரவு, பகல் பாராது அயராது உழைத்து தமிழகத்தில் 2026 ல் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் 7 வது முறையாக கழக ஆட்சி அமைந்து, கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர், திராவிட மாடல் நாயகர் தளபதியார் அவர்கள் இரண்டாவது முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராக ஆட்சியில் அமைய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளில் சபதம் ஏற்போம்.

எனவே மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை கழக செயலாளர்கள், BLA 2, BLC அனைவரும் அவர்கள் சார்ந்த பகுதிகளில் கழக கொடி ஏற்றி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, பொது மக்களுக்கு இனிப்பு வழங்கியும், நலத்திட்ட உதவிகளை வழங்கியும், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்டு புத்தகங்கள், எழுது பொருட்கள் வழங்கியும் சிறப்பாக கொண்டாடப்பட வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நாளை ஜூன் 3 ம் தேதி காலை 10 மணிக்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக சார்பாக மாவட்ட செயலாளர் திரு.தே. மதியழகன் எம் எல்ஏ அவர்களது தலைமையில்

கிருஷ்ணகிரி, ராயக்கோட்டை ரோடு மேம்பாலம் அருகே உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தி, இனிப்பு வழங்கி, 1500 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளது.

இந்த நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், உள்ளாச்சி பிரதிகள், கிளைகழக செயலாளர்கள், BLA 2, BLC உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் அவர்கள் சார்ந்த பகுதிகளில் நிகழ்ச்சியை முடித்துவிட்டு இந்த நிகழ்ச்சியில் வந்து கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

### தென்மேற்கு பருவமழை முன்னேற்பாடு : சேலம் மாவட்டத்தில் – பேரிடர் தொடர்பான

# தகவல்களை 1077 என்ற எண்ணில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தெரிவிக்கலாம்!

### ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!

சென்னை, ஜூன் 2-

மழை உள்ளிட்ட பேரிடர் தொடர்பான தகவல்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் இயங்கும் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் மற்றும் 04272452202ன்ற தொலைபேசி எண்ணிலோ பொது மக்கள் தெரிவிக்கலாம் என தென்மேற்கு பருவமழை தொடர்பான முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

தென்மேற்கு பருவமழை தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தா தேவி முன்னிலையில் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் (31.06.2025) அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்திற்குப்பின்னர் செய்தியாளர்களிடம் சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

தென்மேற்கு பருவமழையானது ஜூன் மாதத்தில் தொடங்கவுள்ள நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க, தேவையான முன்னேற்பாடு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள அனைத்து துறை அரக அலுவலர்களுடன் இன்றைய தினம் ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. குறிப்பாக வருவாய் துறை மருத்துவத் துறை உள்ளாட்சி அமைப்புகள் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி துறை மின்சாரத்துறை வேளாண்மைத் துறை நெடுஞ்சாலைத் துறை போக்குவரத்து துறை உள்ளிட்ட அனைத்து துறையினரும் இணைந்து தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது

சேலம் மாநகராட்சி பகுதி, ஆத்தூர் நரசிங்கபுரம்ட மேட்டூர் எடப்பாடி உள்ளிட்ட நகராட்சிகள் பேரூராட்சிகள். ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் மழை நீர் அதிகம் தேங்கும் பகுதிகளில் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள உறிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது குறிப்பாக சேலம் மாநகராட்சி பகுதிகளான சின்னேரி வயக்காடு சிவதாபுரம் பச்சப்பட்டி ராபன் நகர் உள்ளிட்ட பகுதிகளில் கடந்த நிகழ்வுகளைக் கொண்டு முன்னெச்சரிக்கை நடன்டிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் சேலத்தாம்பட்டி ஏரிப்பகுதியில் மாநகராட்சி அலுவலர்கள். நீர்வளத் துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து ஆய்வு மேற்கொண்டு வெள்ளசேதம் ஏற்படாத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாநகராட்சி பகுதிகளில் அதிகளவிலான மழைப் பொழிவினால் மழைநீர் தேங்கும் பட்சத்தில் மின் மோட்டார்களைக் கொண்டு நீரினை அப்புறப்படுத்திட உரிய முன்னேற்பாட்டுப்பணிகள் மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோன்று திருமணி முத்தாற்றை தூர்வாவதற்கு அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மாநகராட்சியில் உள்ள பொதுமக்கள் பிளாஸ்டிக் பைகள் உள்ளிட்ட இதரப்பொருட்களை கழிவுநீர் கால்வாயில் வீசாமல் பாதுகாக்கும் வகையில் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் இயங்கும் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிலோ, 0427 2452202 என்ற தொலைபேசி எண்ணிலோ மழைநீர் வெள்ளம் குறித்த தகவல்களை தெரிவிக்கணம். அதே போன்று தாழ்வான பகுதியில் உள்ள பொதுமக்கள் மழைகாலங்களில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அவசர தேவை ஏற்படின் மேற்குறிப்பிட்டுள்ள எண்களுக்கு தொடர்பு கொண்டால் அவர்களுக்கு தேவையான தனிகள் டனடியாக மேற்கொள்ளப்படும். சுகாதாரத்துறையின் மூலம் காய்ச்சல் முகாம்கள் மற்றும் மருத்துவ முகாம்கள் தேவைகளுக்கு ஏற்ப மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. மழைநீர் தேங்கும் பட்சத்தில் வருவாய்த்துறை உள்ளிட்ட அனைத்துத் துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பள்ளிகள். கல்லூரிகள் மற்றும் திருமண மண்டபங்கள் உள்ளிட்டவற்றில் தங்குவதற்கு தேவையான முகாம்கள் ஏற்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முதன்மைக்கல்வி அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு மழைநீர் பாதிப்பு ஏற்படாத வகையில் பள்ளி கட்டடங்களை ஆய்வு செய்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் பள்ளி சிறார்கள் நீர் நிலைகளில் இறங்காமல் தடுக்கும் வகையில் மாநகராட்சி ஊரக வளர்ச்சித் துறை, நீர்வளத்துறை அலுவலர்களுக்கு எச்சரிக்கை பலகைகள் வைப்பதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழையின்போது அனைத்துத் துறை அரசு அலுவலர்களும் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகளை முழுமையாக மேற்கொள்ள வேண்டுமென இக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. சுற்றுலாத்துறை அமைச்சர் இராஜேந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திருமதி நே.பொன்மணி மாவட்ட வருவாய் அலுவலர் இரார விக்குமார், மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் இளங்கோவன் உள்ளி ட்ட அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## தி.வ.விஸ்வநாதன்

## ஜூன் 2 (2023)



தனது இளமை பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

திருவொற்றியூர் பகுதியில் வட்டச் செயலாளர், நகரச் செயலாளர், நகர பொறுப்பாளர், மாவட்ட பொருளாளர், மாவட்ட துணைச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

திருவொற்றியூர் நகர்மன்ற உறுப்பினர், நகர்மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**